நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# இலவச கறவை மாடு, ஆடு வழங்கும் திட்டம் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் குழுவுக்குப் பயிற்சி

First Published : 08 Aug 2011 09:14:22 AM IST

சிவகங்கை, ஆக. 7:÷சிவகங்கையில் இலவச கறவை மாடு, ஆடு வழங்கும் திட்டத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்வது தொடர்பாக கிராம அளவிலான தேர்வுக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷கூட்டத்துக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமை வகித்து பேசியதாவது:÷செப்டம்பர் 15-ம் தேதி இலவச கறவை மாடு, ஆடு வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் முதல் கட்டமாக தேவகோட்டை ஒன்றியம் கண்ணங்கோட்டை, திருப்புவனம் ஒன்றியம் செல்லப்பனேந்தல் ஆகிய பகுதிகளில் ஆடுகளும், இளையான்குடி ஒன்றியம் கண்ணமங்கலம், மருதங்கநல்லூர் ஆகிய ஊராட்சிகளில் கறவை மாடுகளும் வழங்க பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

÷இந்த 4 ஊராட்சிகளில், இத்திட்டத்தின் விதிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கவும், பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறவும் திங்கள்கிழமை (ஆக. 8) காலை 11 மணிக்கு சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும். இக் கூட்டத்தில் பயனாளிகளின் தகுதிகள் குறித்து எடுத்துக் கூறப்படும்.

÷ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், தாழ்த்தப்பட்ட பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மூத்த வார்டு உறுப்பினர், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர், மகளிர் சுய உதவிக் குழு தலைவி, அந்த பகுதி கால்நடை உதவி மருத்துவர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என 7 பேர் கொண்ட குழு ஒவ்வொரு ஊராட்சியிலும் பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

÷ஆகஸ்ட் 8 முதல் 12-ம் தேதி வரை மேற்கண்ட ஊராட்சிகளில் பயனாளிகளிடம் இக்குழு நேரடியாக விண்ணப்பங்களைப் பெறும். 13-ம் தேதி விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

÷பின்னர், சுதந்திர தினத்தன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பொது மக்கள் முன்னிலையில் தகுதியுள்ள பயனாளிகளின் பெயர் பட்டியல் வெளியிடப்படும் என்றார் ஆட்சியர்.

÷கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அறிவழகன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சீனிவாசன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மணி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், மகளிர் சுய உதவிக் குழு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருந்திய நெல் சாகுபடி பயிற்சி**

First Published : 08 Aug 2011 08:57:22 AM IST

போடி, ஆக. 7:÷தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது.

÷போடி மேலச்சொக்கநாதபுரத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் சார்பில், தேனியாறு உபவடி நிலத்தில் செயல்படுத்தப்படும் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசுந்தாள் உரம், திருந்திய நெல் சாகுபடி, நெல் தரிசில் பயறு வகை சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

÷வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ரா.ரெங்கநாயகி தலைமை வகித்து பேசியது: ஆள் பற்றாக்குறையை தவிர்க்க, திருந்திய நெல் சாகுபடியில் நடவு இயந்திரத்தை பயன்படுத்தலாம். வாழையில் துல்லிய பண்ணையம் அமைத்தால் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம் மானியம், கரும்புக்கு ரூ.70 ஆயிரம் வரை மானியம் கிடைக்கும் என்றார்.

÷உழவியல் துறை இணைப் பேராசிரியர் ச.சக்திவேல், திருந்திய நெல் சாகுபடி மூலம் அதிக மகசூல் எடுப்பது குறித்தும், உதவி பேராசிரியர் மு.கதிரவன் பயறு வகை சாகுபடி குறித்து பேசினார்.

÷பயிற்சிக்கான ஏற்பாடுகளை இளநிலை ஆராய்ச்சியாளர்கள் சத்தியமூர்த்தி, அசோக் பிரகாஷ் ஆகியோர் செய்தனர். மேலச்சொக்கநாதபுரம், மீனாட்சிபுரம் கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**ஆடுகள் வழங்கும் திட்டத்துக்கான சிறப்பு கிராமசபை கூட்டம்**

First Published : 07 Aug 2011 12:23:34 PM IST

பெரம்பலூர், ஆக. 6: பெரம்பலூர் மாவட்டத்தில், இலவசமாக ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அயினாபுரம், அந்தூர் உள்ளிட்ட 2 கிராம ஊராட்சிகளில் திங்கள்கிழமை (ஆக. 8) சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு ஊரக பகுதிகளில் வாழும் மிகவும் ஏழ்மையான மக்களுக்கு இலவசமாக பசுமாடுகள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் செப். 15 ஆம் தேதி முதல் தொடங்கப்படவுள்ளது.

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியத்தில் உள்ள அயினாபுரம், வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள அந்தூர் உள்ளிட்ட 2 கிராம ஊராட்சிகளில் இத்திட்டத்தை முதல்கட்டமாக செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் விதிகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவற்காக 2 ஊராட்சிகளிலும் திங்கள்கிழமை (ஆக. 8) காலை 11 மணிக்கு சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில், உதவி கால்நடை மருத்துவர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் இத்திட்டம் தொடர்பாக விளக்கம் அளிக்க உள்ளனர். இந்த ஊராட்சிகளில் ஆக. 15 ஆம் தேதி நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டங்களில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

எனவே, இந்தக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**தோட்டக்கலை பயிர் சாகுபடியை ஊக்குவிக்க மானிய திட்டங்கள்**

First Published : 07 Aug 2011 03:13:06 PM IST

பல்லடம், ஆக. 6: பல்லடம் வட்டாரத்தில் 2011-12ம் ஆண்டில் தோட்டக்கலை துறை மூலம் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் கே.எஸ்.சுகந்தி தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து அவர் கூறியது: பழப்பயிர்கள், காய்கறி பயிர்கள், மலர் வகைகள், வாசனை திரவிய பயிர்கள் மற்றும் மருத்துவப் பயிர்கள் அனைத்துமே தோட்டக்கலை பயிர்களாகும். இவ்வகை தோட்டக்கலை பயிர்களின் பரப்பினை அதிகரிக்கவும், ஊக்குவிக்கவும் தோட்டக்கலை துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

÷ஒரு ஹெக்டேரில் சாகுபடி செய்ய பழப் பயிர்களில் பெரு நெல்லிக்கு ரூ.10,500ம், மா சாகுபடிக்கு ரூ.9,900, மா அடர் நடவிற்கு ரூ.24 ஆயிரம், வாழைக்கு ரூ.16,875, திசு வாழைக்கு ரூ.31,200 மானியம் வழங்கப்படுகிறது.

÷பூ வகைகளில் உதிரிப் பூக்களான கோழிக்கொண்டை, மல்லிகை, செண்டுமல்லி ஆகியவற்றுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரம், வாசனை திரவியப் பயிர்களில் மஞ்சளுக்கு ரூ.12,500 மானியம் வழங்கப்படுகிறது.

÷தென்னையில் ஊடுபயிராக கோ கோ சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரம், ஒரு ஹெக்டேரில் சோகை விரித்தலுக்கான மானியம் ரூ.10 ஆயிரம், மண்புழு உரம் தயாரிக்க வெர்மிபெட் அமைக்க ரூ.5 ஆயிரம் மானியம் அளிக்கப்படுகிறது.÷மேற்படி மானியங்கள் அனைத்தும் தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விசாயிகளுக்கு செடிகளாகவும்,

இயற்கை உரங்கள், நுண்ணுயிர் உரங்கள், நுண்ணுயிர் பூச்சி மற்றும் பூஞ்சானக் கொல்லிகளாகவும் மட்டுமே வழங்கப்படும்.

÷மானியம் பெற விவசாயிகள் சிட்டா அடங்கல், குடும்ப அட்டை, கிராம நிர்வாக அலுவலர் சான்று, 4 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரடியாக அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என்றார்.

பின்னலாடை தொழிலை நவீனப்படுத்தும்

---

தினமலர்

**கிழங்கு சாகுபடியில் அதிக ஆர்வம்: லாப பயிருக்கு மாறும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,01:50 IST

திருவண்ணாமலை : திருவண்ணாமலை விவசாயிகள், லாபம் தரக்கூடிய கருணை மற்றும் சேம்பங் கிழங்கு சாகுபடியில் அதிக ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் நெல், கரும்பு, வாழை, மணிலா போன்ற பயிர்கள் விவசாயிகள் சாகுபடி செய்து வந்தனர். திருவண்ணாமலை அடுத்த தென்மாத்தூர், சு.ஆண்டாப்பட்டு, அழகானந்தல், கொளக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம விவசாயிகள் தற்போது, கருணை மற்றும் சேம்பங் கிழங்கு சாகுபடிக்கு மாறி லாபத்தை ஈட்டி வருகின்றனர். ஆறு மாதத்தில் அறுவடை செய்யப்படும் இந்த பயிர் ஒரு ஏக்கருக்கு, 7 முதல் 10 டன் வரை விளைச்சல் கொடுக்கிறது. ஒரு டன் சேம்பங் கிழங்கு, 24 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது. ஒரு ஏக்கருக்கு, 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை விதை செலவாகிறது. களை எடுத்தல், உரம் இடுதல், போன்ற செலவினங்களை சேர்த்து மொத்தம் ஏக்கருக்கு, 25 ஆயிரம் முதல் 30,000 ரூபாய் மட்டுமே செலவாகிறது. மகசூல், இரண்டரை லட்சம் முதல் 4 லட்சம் வரை ஏக்கருக்கு கிடைக்கிறது. இங்கு விளையக்கூடிய கருணை மற்றும் சேம்பங் கிழங்குகள் பெங்களூரு, சென்னை, சித்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்து நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். இதனால், விற்பனைக்கு அலைய வேண்டிய அவசியமும் விவசாயிகளுக்கு ஏற்படவில்லை. மார்க்கெட்டில் விலை கிடைக்காவிட்டால், கூடுதலாக இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை நிலத்தில் பாதுகாத்து, விலை கிடைக்கும் போது கிழங்குகளை அறுவடை செய்ய முடியும். மற்ற பயிர்களை இது போல் பாதுகாக்க முடியாது. இது போன்று வசதிகள் இருப்பதால், விவசாயிகள் கிழங்கு சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எப்போது வேண்டுமானாலும் பயிர் செய்ய முடியும். வறட்சி

மற்றும் மழையை தாங்க கூடிய பயிர் என்பதாலும், விவசாயிகள் பெரிதும் ஆர்வமுடன் பயிரிடுகின்றனர்.

**உரம் தட்டுப்பாட்டால் விவசாயிகள் திண்டாட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2011,01:43 IST

கடலூர் : முன்பருவ சம்பா நெல் பயிருக்கு உரம் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடி வருகின்றனர்.நிலத்தடி நீரை பயன்படுத்தி விருத்தாசலம், சிதம்பரம், கடலூர் ஒன்றியங்களில் நெல் பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கதிர் வரும் தருவாயில் உள்ள பயிருக்கு மணிச்சத்துள்ள பொட்டாஷ், டி.ஏ.பி., உரங்கள் தேவைப்படுகிறது.தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வந்த உரம் தற்போது திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.இந்த தட்டுப்பாடு காரணமாக ஸ்டாக் வைத்துள்ள சில கடைக்காரர்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.இன்னும் பயிருக்குத் தேவையான உரம் போடமுடியாமல் பயிருக்கு சம்மந்தமில்லாத உரத்தை பயன்படுத்தும் நிலை உள்ளது.இதனால் விவசாயிகள் புதுச்சேரியில் இருந்து உரத்தை வாங்கிச்சென்று உபயோகிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

**மண் பரிசோதனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:57 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் இலவச மண் பரிசோதனை முகாம் நடக்கிறது.இப்கோ உர கூட்டுறவு நிறுவனம், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் இணைந்து இலவச நடமாடும் மண் பரிசோதனை முகாமை நடத்துகிறது. கடந்த 2ம் தேதி கொங்கம்பட்டில் 62 மண் பரிசோதனையும், 3ம் தேதி வீடூரில் 75 மண் பரிசோதனையும் செய்யப்பட்டது.இதனை தொடர்ந்து இன்று (8ம் தேதி) கணக்கன்குப்பத்திலும், நாளை (9ம்தேதி) மொடையூரிலும் மண் பரிசோதனை முகாம் நடக்கிறது.

**ஆயிரத்து 339 டன் உரம் ரயில் மூலம் வந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:57 IST

விழுப்புரம் : தூத்துக்குடியிலிருந்து ரயில் மூலம் 1,339 டன் உரம் முண்டியம்பாக்கம் வந்தது.மங்களூர் கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தின் மங்களா 20-20 உரம் 1,339 டன் உரம் தூத்துக்குடியிலிருந்து கடந்த 5ம் @ததி இரவு முண்டியம்பாக்கம் வந்தது. ரயில் மூலம்

21 வேகன்களில் வந்த உர மூட்டைகள் விற்பனை மேலாளர் ராஜ்குமார், கூட்ஸ்ஷெட் காண்ட்டிராக்ட் மேலாளர் சுதாகர் மேற்பார்வையில் 75 லாரிகளில் ஏற்றி வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

**நடமாடும் மண் பரிசோதனை முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:57 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் இலவச மண் பரிசோதனை முகாம் நடக்கிறது.இப்கோ உர கூட்டுறவு நிறுவனம், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் இணைந்து இலவச நடமாடும் மண் பரிசோதனை முகாமை நடத்துகிறது. கடந்த 2ம் தேதி கொங்கம்பட்டில் 62 மண் பரிசோதனையும், 3ம் தேதி வீடூரில் 75 மண் பரிசோதனையும் செய்யப்பட்டது.இதனை தொடர்ந்து இன்று (8ம்தேதி) கணக்கன்குப்பத்திலும், நாளை (9ம்தேதி) மொடையூரிலும் மண் பரிசோதனை முகாம் நடக்கிறது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மண்டல இணைப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

**பயறு வகை சாகுபடிக்கு வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,02:07 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் காரிப் பருவத்தில் மானாவாரி மற்றும் இறவையில் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்ய வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. நல்லம்பள்ளி வட்டார வேளாண் உதவி இயக்குனர் வேணுகோபால் வெளியிட்ட அறிக்கை: காரிப் பருவத்தில் தர்மபுரி மாவட்டத்துக்கு ஏற்ற மானாவாரி மற்றும் இறவையில் குறைந்த நாளில் நிறைந்த வருமானம் பெற பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யலாம். நல்லம்பள்ளி வேளாண் விரிவாக்க மையம் மற்றும் இண்டூர் துணை வேளாண் விரிவாக்க மையத்தில் இதற்கு தேவையான சான்று பெற்ற பயிறு வகை விதைகள் இருப்பில் உள்ளது. சான்று பெற்ற தரமான காராமணி கோ 6, உளுந்து வம்பன் 3, பாசிப்பயறு கே.எம்., 2 மற்றும் துவரை ஐ.சி.பி.எல் 85063 ஆகிய ரக விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நல்லம்பள்ளி வட்டாரத்தில் இறவையில் தனிப்பயிராக துவறை செயல் விளக்க திடல் 72.00 ஹெக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. இறவையில் துவரை தனிப்பயிராக செயல் விளக்க திடல் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 5,000 ரூபாய் மானியம் வழங்கப்பட உள்ளது. உளுந்து, காராமணி, பாசிப்பயறு போன்ற பயறு வகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. பயறு வகை சாகுபடி செய்யும் விசவாயிகள் வேளாண் விரிவாக்க மையம் நல்லம்பள்ளி மற்றும்

இண்டூர் துணை வேளாண் விரிவாக்க மையங்கள் விதைகளை மானியத்தில் பெறலாம். மேலும் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகி விபரங்களை பெற்று பயன் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**துவரை சாகுபடியில் புதிய தொழில் நுட்பம்மகசூல் அதிகரிக்க நடவு முறை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,01:53 IST

ஓசூர் : தமிழகத்தில் முதல் முறையாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாற்று பாவி அவற்றை பிடுங்கி நடவு செய்யும் புதிய முறையில், விவசாயிகள் துவரை சாகுபடி செய்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக நடக்கிறது. இங்கு உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள், மலர்கள், பயறு வகைகள் வெளிமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டத்திற்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. மாவட்டத்தில் 4,000 ஹெக்டேரில் துவரை சாகுபடி நடக்கிறது. ஓசூர் தாலுகாவில் மட்டும், 1,200 ஹெக்டேரில் துவரை சாகுபடியில் விவசாயிகள் ஈடுப்பட்டுள்ளனர். துவரை அன்றாட சமையலுக்கும் அதிகளவில் பயன்படுத்தப்படுவதால், அவற்றின் தேவை அதிகரித்துள்ளது. துவரை சாகுபடியில் மகசூலை அதிகரிக்க, தமிழக வேளாண் துறை பல்வேறு புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தி வருகிறது. நடப்பாண்டு, துவரை சாகுபடியில் விதை விதைப்புக்கு பதிலாக, நாற்று பாவி, 25 நாட்கள் வளர்ந்த நாற்றுகளை பிடுங்கி நிலத்தில் நடும் புதிய தொழில்நுட்ப முறை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓசூர் தாலுகாவில், பி.செட்டிப்பள்ளி உள்ளிட்ட கிராமங்களில் இந்த புதிய நாற்று நடும் முறையில் விவசாயிகள் துவரை சாகுபடி செய்துள்ளனர். பொதுவாக துவரை சாகுபடியில் விதை விதைக்கும் போது, துவரை செடிகளுடன் களைகளும் சேர்ந்து விரைவாக வளரும். சில நேரத்தில் களைகள் செடிகளை மூடி அவற்றின் வளர்ச்சியை தடுத்து மறைத்து விடும். களை எடுத்தால் மட்டுமே துவரை செடி வளர்ச்சி பெறும். மேலும், விதைப்பில் சில இடங்களில் மொத்தமாகவும், சில இடங்களில் இடைவெளி விட்டும் சீராக சாகுபடி இருக்காது. அதனால், மகசூலும் எதிர்பார்த்த அளவு கிடைக்காது. தற்போது, அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நாற்று நடவு முறையில் இரட்டிப்பு மகசூல் பெற முடியும். இதனால், களைகள் பிரச்னை குறையும். அதற்கான செலவும் மிச்சமாகிறது. செடிகள், 100 சதவீதம் நன்றாக வளர்ச்சி பெறும். உரம் போடுவது, தண்ணீர் பாய்ச்சுவது எளிமையாகிறது. செடிகளின் வளர்ச்சி அபரிதமாக இருப்பதால், அதிக கிளைகள் ஏற்பட்டு, மகசூல் இரட்டிபாக கிடைக்கிறது. விதைப்பு முறையில், ஏக்கருக்கு அதிகபட்சம், 700 கிலோ வரை கிடைக்கும். நாற்று நடும் புதிய முறையில் ஏக்கருக்கு, 1,500 கிலோ வரை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறைந்தப்பட்சம், 1,000 கிலோ உறுதியாக கிடைக்கும். ஓசூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: ஓசூர்

தாலுகாவில் பெரும்பாலும் மானாவரியாக துவரை சாகுபடி செய்யப்படுகிறது. இதனால், மழையில்லாமல் சில நேரத்தில் மகசூல் குறையவும், நஷ்டமும் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால், இறவை பாசனத்தில், நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**வாழைப்பயிரில் இலைப்புள்ளி நோய்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,03:19 IST

கோபிசெட்டிபாளையம்:கோபி பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்குட்பட்ட , நல்லகவுண்டன்பாளையம், கோபிபாளையம், வாணிப்புத்தூர், போடிசின்னாம்பாளையம், பங்களாபுதூர் உள்ளிட்ட இடங்களில், 2,000 ஹெக்டேரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. ரொபஸ்ட்ரா, கதளி, தேன் வாழை ஆகிய ரகங்கள் அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதலும், சிறு இலை வைரஸ் நோய் தாக்குதலும் அதிகம் தென்படுகிறது. இலைப்புள்ளி நோய் தாக்கிய வாழையில், இலை கருகிய நிலையில் காணப்படுகிறது.

படிப்படியாக இலை கருகி, வாழைக்கன்று அழிந்து விடும் நிலையில் உள்ளது. விவசாயிகள் கூறியதாவது: வாழைக்கன்றுகளை 12 முதல் 15 ரூபாய் வரை கொடுத்து வாங்கி வருகிறோம். குழி வெட்டு கூலி, நடவுக்கூலி என, ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. தொடர்ந்து பராமரிப்பு செலவு தனி. ஆயிரக்கணக்கில் செலவு செய்து வாழை பயிரிட்டுள்ள நிலையில், இலைப்புள்ளி நோய் பரவலாக தாக்கியுள்ளது. நடவு செய்து சில வாரங்களான வாழைக்கன்று முதல், குலை தள்ளும் நிலையில் உள்ள பெரிய மரம் வரை இலைப்புள்ளி நோய் தாக்கியுள்ளது. இலைகள் கருகி, மரமே அழிந்து விடும் நிலையில் உள்ளது.

வாழை மரங்கள் அழிந்து விட்டால், ஏக்கருக்கு 80 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படும். இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் பொங்கியண்ணன் கூறியதாவது: கோபி தாலுகாவில் 2,000 ஹெக்டேரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில், 2.5 கிராம் மேங்கோசைட் மற்றும் ஒட்டும் திரவம் ஆகியவற்றை கலந்து, ஏக்கருக்கு 15 டேங்க் தெளிக்க வேண்டும். மீண்டும் பத்து நாள் கழித்து மருந்து அடிக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் இலைப்புள்ளி நோய் கட்டுப்படும். காற்றின் மூலம் பரவும் இலைப்புள்ளி நோய் தாக்கிய இலைகளை முற்றிலும் அகற்றி எரிக்க வேண்டும். இந்நோய்க்கு காரணமான பூஞ்சை, காற்றில் பரவும் தன்மை கொண்டதால், ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாடு முறையை விவசாயிகள் கையாள வேண்டும். நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் விரிவாக்க அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**விதையின் தரத்தை அறிந்து கொள்ள அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,01:53 IST

பொள்ளாச்சி : "ஆடிப்பட்டத்தில் விதைப்பு செய்யும் விவŒõயிகள், விதையின் தரத்தை அறிந்து கொண்டால் மகசூல் அதிகரித்து லாபம் பெற முடியும்' என, விதைப்பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார்.கோவை, விதை பரிசோதனை அலுவலர் மோகனசுந்தரம் அறிக்கை:விவசாயிகள் கையாளும் விதை நல்ல தரமானதாகவும், முளைப்புத்திறன், புறத்தூய்மை, சரியான ஈரப்பதம் கொண்டதாக இருக்க வேண்டும். அப்போது தான் பயிர்களுக்கு இடப்படும் இடுபொருட்களான உரம், பூச்சி மருந்து போன்றவை இடப்பட்டதற்கான நோக்கம் நிறைவேறும்.விவசாயத்தில் அதிக மகசூல் பெற சரியான பயிர் எண்ணிக்கை பராமரித்தல் அவசியமாகும். பயிர் எண்ணிக்கை அதன் முளைப்புத்திறனை பொறுத்தே அமைகிறது. தரமான விதையை பயன்படுத்தாவிட்டால் பயிர் எண்ணிக்கை குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.இதை தவிர்க்க விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள், விதைப்பதற்காகவும், விற்பனைக்காகவும் இருப்பு வைத்துள்ள விதைகளை விதை பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும்.விதை பரிசோதனை செய்வதற்கு, கோவை தடாகம் ரோட்டில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் குறைந்த கட்டணத்தில் ஒரு மாதிரிக்கு 30 ரூபாய் வீதம் செலுத்தி விதையின் புறத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிற ரக கலப்பு ஆகியவற்றை கண்டு அறியலாம்.அதனால், விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளில் மாதிரி எடுத்து, பயிர், ரகம் மற்றும் குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு, விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், தடாகம் ரோடு, கோவை என்ற முகவரிக்கு அனுப்பி பரிசோதனை செய்து கொள்ளலாம்.ஆடிப்பட்டத்தில் விதைப்பு செய்ய தயாராக இருக்கும் விவசாயிகள் விதையின் தரத்தை அறிந்து கொண்டால் மகசூல் அதிகரித்து லாபம் பெற முடியும். அதனால் அரசு துறை மூலம் கிடைக்கும் விதை பரிசோதனை வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு, அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சந்தைக்கு நெல் வரத்து குறைவு; அரிசி விலை "கிடுகிடு' உயர்வு!**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,00:40 IST

பொள்ளாச்சி : தமிழகத்தில், நெல் விளைச்சல் குறைவு, வெளிமாநிலங்களிலிருந்து போதிய நெல் வரவு இல்லாததால் சந்தைக்கு அரிசி வரத்து குறைந்துள்ளது. இதனால், வெளிச்சந்தைகளில் பொன்னி ரக அரிசி விலை 75 கிலோ மூட்டைக்கு 250 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.தமிழகத்தில், புதுவயல், காஞ்சிபுரம், வேலூர், ஆரணி, தஞ்சாவூர், காங்கேயம், மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இப்பகுதிகளில், விளைவிக்கப்படும் நெல், தமிழகத்தின் பிறப்பகுதிகளில் உள்ள அரிசி ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு அரிசியாக மாற்றி வெளிசந்தைகளுக்கு அனுப்புகின்றனர்.சமீப காலமாக விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால், விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால், பல விளை நிலங்கள் "லே-அவுட்'களாக மாறிவருவதால், தமிழகத்தில் நெல் பயிரிடும் பரப்பு குறைந்துள்ளது.இந்தாண்டு, பருவம் தவறிய மழை காரணமாக நெல் விளைச்சல் போதுமானதாக இல்லை. கர்நாடாகா, ஆந்திரா மாநிலங்களிலிருந்து தற்போது நெல் வரத்து குறைந்துள்ளது.போதிய நெல் வரத்து இல்லாததால், சந்தைகளுக்கு இம்மாதம் அரிசி வரத்து குறைந்துள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு தற்போது வாரத்திற்கு 50 டன் வரை மட்டுமே அரிசி வரத்தாக உள்ளது. வரத்து குறைந்து வருவதால், பொன்னி ரக அரிசியின் விலை உயர்ந்து வருகிறது. இந்த ரக அரிசியின் விலை மட்டும் ஒரு மாதத்தில், 75 கிலோ மூட்டைக்கு 250 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.இம்மாத அரிசியின் விலை நிலவரம் (75 கிலோவுக்கு):பி.பி.டி., (பழையது) - 2,250, பி.பி.டி., (புதியது) - 1,900, எமர்ஜன் பொன்னி - 1,800, ஜெ13 - 1,600, கர்நாடகா டீலக்ஸ் - 2,250, காஞ்சிபுரம் 45 - 1,750, கர்நாடகா பொன்னி (ஆப்பாயில்) - 1,950, இட்லி அரிசி - 1,250 என விற்கப்படுகிறது.பொள்ளாச்சி பகுதி அரிசி வியாபாரிகள் சங்க செயலாளர் கனகராஜ் கூறுகையில், ""நெல் விளைச்சல் குறைந்துள்ளதால், சந்தைக்கு அரிசி வரத்து குறைந்துள்ளது. இதுவே விலை ஏற்றத்திற்கு காரணம். இனி, வரும் மாதங்களில் வெளிச்சந்தையில் அரிசி வரத்து குறைந்தால், விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. அரிசி வரத்தை பொறுத்தே விலை நிர்ணயிக்கப்படும். ஆனால், ஒரு மாதத்தில் அரிசி விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதத்தில், 75 சதவீதம் விற்பனையில் சரிவு ஏற்பட்டுள்ளது' என்றார்.

**வேளாண் விவசாய மாணவர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,02:30 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் வட்டாரத்தில் வேளாண் விவசாய மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேதாரண்யம் வட்டாரத்தில் உள்ள கரியாப்பட்டினம், செட்டிப்புலம்,

நெய்விளக்கு ஆகிய கிராமங்களில் விவசாயிகளை நேரில் தொடர்பு கொண்டு விவசாய தொழில்நுட்பங்களை கண்டறிந்து பயன்பெறவும், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் விவசாயிகளிடம் மாணவர்கள் கற்றறிந்தனர். காரைக்கால் ஜவஹர்லால் நேரு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் கடந்த சில தினங்களாக இந்த பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கல்லூரி முதல்வர் பாஸ்கர், பேராசிரியர்கள் ஆனந்த கிருஷ்ணன், பார்த்தசாரதி ஆகியோர் முன்னிலையில் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். விவசாய தொழில்நுட்பங்களை மாணவர்கள் தெரிந்து கொள்ளவும், நிலங்களின் தன்மை, நீர், நில இயற்கை வளங்கள், பயிற் சாகுபடி முறை ஆகியவற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் புள்ளி விபரங்களையும் ஆலோசனைகளையும் வழங்கிட தேவையான ஒத்துழைப்பை விவசாயிகள் அளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய இடுபொருட்கள் 50 சதவீத மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஆயில் இன்ஜின்கள், ரொட்டவேட்டர் கருவிகள், பவர் டில்லர், தார்பாயிகள், விசைத்தெளிப்பான் போன்றவை மானியத்தில் தகுதியுடைய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வேதாரண்யம் வட்டாரத்தில் உள்ள கரியாப்பட்டினம், வாய்மேடு, வேதாரண்யம் ஆகிய விரிவாக்கமையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதாகவும், தேவையான விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டு பயனடையுமாறு வேளாண் உதவி இயக்குனர் மணிகண்டன் தெரிவித்தார்.

**வேளாண் மாணவிகளின் செயல் முறை விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:31 IST

அலங்காநல்லூர் : மதுரை வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவம் திட்டத்தின் கீழ் கொண்டையம்பட்டியில் விவசாய தொழில் நுட்பம் குறித்து செயல்விளக்கம் அளித்தனர். கொண்டையம்பட்டி, கள்வேலிபட்டி, பெரிய இலந்தைகுளம் பகுதியில் ரோஜா, சம்பங்கி, மல்லிகை பூ செடி அதிக அளவில் பயிரிட்டுள்ளனர். இங்கு ஜெமீலா தலைமையிலான மதுரை வேளாண் கல்லூரி மாணவிகள் ரோஜா செடியில் கவாத்து செய்து அதிக அளவில் லாபம் பெறுதல், நெல் பயிர் உயிர் உர நேர்த்தி, உப்பு நீர் கரைசலில் விதை நேர்த்தி, தென்னையில் வேர் மூலம் ஊட்ட மருந்து செலுத்துதல் உட்பட பல்வேறு செயல்விளக்கங்களை விவசாயிகளுக்கு செய்து காண்பித்தனர். ஊராட்சி தலைவி தேன்மொழி தலைமையில் மண் வளம் காத்தல், புவி வெப்பமயமாவதை தடுத்தல், விளை நிலங்கள் விற்பதை தடுத்தல் உட்பட கோரிக்கையினை வலியுறுத்தி ஊர்வலம் நடந்தது. கல்லூரி பேராசிரியர் சேகர், உதவி

பேராசிரியர்கள் மகேந்திரன், வேலுச்சாமி முன்னிலை வகித்தனர். தலைமை ஆசிரியை கீதா ஊர்வலத்தை துவக்கி வைத்தார்.

**நெல்கொள்முதல் நிலையம் திறக்க சோழவந்தான் விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:34 IST

குருவித்துறை : குருவித்துறை, நாச்சிக்குளம், தென்கரை பகுதியில் நெல்கொள்முதல் நிலையம் அமைக்க இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சோழவந்தான், தென்கரை, ஊத்துக்குழி, குருவித்துறை, மண்ணாடிமங்கலம், நாச்சிக்குளம், கரட்டுப்பட்டி, கருப்பட்டி, இரும்பாடி, மேலக்கால், கச்சிராயிருப்பு, மட்டையான் உட்பட 20 கிராமங்களில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில், கிணறு, கண்மாய் பாசனத்தில் இரண்டாவது போகம் நெற்பயிர் பயிரிடப்பட்டன. முதல் போகம் அறுவடை செய்த நெல்லை சோழவந்தான், குருவித்துறை, தென்கரை, நாச்சிக்குளம் பகுதிகளில் செயல்பட்ட நெல்கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் கொள்முதல் செய்தனர். இதனால் விவசாயிகளுக்கு உடனடி பணம் பட்டுவாடா செய்யப்பட்டு, செலவினங்கள், அலைச்சல்கள் இல்லாமல் விவசாயிகள் நிம்மதியடைந்தனர்.

தற்போது சோழவந்தானில் மட்டும் நிலையம் செயல்படுகிறது. குருவித்துறை, நாச்சிக்குளம், தென்கரை பகுதிகளில் நிலையம் மூடப்பட்டது. இரண்டாவது போகத்தில் அறுவடை செய்த நெல்லை 15 கிலோ மீட்டர் தூரமுள்ள சோழவந்தான் நிலையத்திற்கு கொண்டு செல்வதில் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். நிலையத்தில் நெல் கூடுதலாக இருந்தால் கஷ்டப்பட்டு கொண்டு வந்த மூடைகளை கேட்டுக்கு வெளியே நிறுத்தப்படுகிறது. மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து நெல் சேதமடைகிறது. வியாபாரிகளுக்கு முன்னுரிமை தரப்படுகிறது. விவசாயிகள் வேதனை அடைகின்றனர்.

திருடர்களின் பயத்தால் பல நாட்கள் பகல், இரவு நேங்களில் கண் விழித்திருந்து பாதுகாப்பதில் விவசாயிகளுக்கு மன உலைச்சல் ஏற்படுறது. இதுபோன்ற அவலநிலைய போக்க மூடப்பட்ட மூன்று நிலையத்தை திறக்க, இப்பகுதி விவசாயிகள் மதுரை கலெக்டர் சகாயத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மதிப்பு கூட்டு வரியிலிருந்து உணவு பொருட்களுக்கு விலக்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:30 IST

மதுரை : மதிப்பு கூட்டு வரியிலிருந்து அத்தியாவசியமான உணவு பொருட்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் வலியுறுத்தியது. சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை: சொட்டு நீர் பாசன திட்டத்தை அமல்படுத்த சிறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம், உணவு தானிய உற்பத்தி இலக்கு இந்தாண்டு 115 டன்னாக உயர்த்துதல் போன்ற அறிவிப்புகள் தமிழக பட்ஜெட்டில் வெளியானது வரவேற்கத்தக்கது. வேளாண்மையும், வேளாண் சார்ந்த தொழில்களையும் ஊக்குவிக்க அரசு அத்தியாவசிய வேளாண் பொருட்களுக்கும், அதிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களுக்கும் (உழவு முதல் நுகர்வு வரை) மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொட்டாஷ் உரம்: பாரதிய கிசான் சங்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:26 IST

சோழவந்தான் : சோழவந்தான், வாடிப்பட்டி பகுதிகளில் பொட்டாஷ் உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாரதிய கிசான் சங்கம் வலியுறுத்தியது. அதன் மாநில பொது செயலாளர் பெருமாள், கலெக்டர் சகாயத்திற்கு அனுப்பிய மனு: வாடிப்பட்டி, கட்டக்குளம் பகுதிகளில் தற்போது நெல் பயிறுக்கு களை எடுக்கும் பணி நடக்கிறது. இதுமுடிந்தவுடன் நெல் பயிருக்கு யூரியா, பொட்டாஷ் ஈட வேண்டும். இப்பகுதியில் விவசாய கூட்டுறவு வங்கியிலும், தனியார் கடைகளிலும் பொட்டாஷ் உரம் கிடைக்கவில்லை. உரம் கிடைக்க செய்ய வேண்டும். சோழவந்தான் நெல் கொள்முதல் நிலையம் மூடப்படுவதாக தகவல்கள் நிலவுகிறது. விவசாயிகளுக்கு தகுந்த விலை கிடைக்காமல் போகும். நெல் கொள்முதல் நிலையத்தை மேலும் இரு மாதங்களுக்கு நீடிக்க செய்ய வேண்டும்.

**நெல் விளைச்சலில் தேனி முதலிடம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:24 IST

தேனி : மாநில அளவில் எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி நெல் விளைச்சலில் தேனி மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது. மாவட்டத்தில் 17 ஆயிரத்து 174 ஹெக்டேரில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த ஆண்டு திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தில் கோரக்நாத்- 509,

லோக்நாத் -505 என்ற வீரிய ரக நெல் விதைகள் நடவு செய்யப்பட்டன. இதனால் விளைச்சல் அதிகம் இருந்தது. புள்ளியியல் துறை நடத்திய சராசரி நெல் அறுவடை பரிசோதனையில் மாவட்டத்தில் அதிக பட்சம் நெல் விளைச்சல் ஹெக்டேருக்கு 11 டன் ஆகவும், சராசரி சாகுபடி 8.5 டன் ஆகவும் உள்ளது. இதனால் மாநில அளவில் தேனி மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு மாவட்டத்தின் நெல் விளைச்சல் சராசரி 9 டன் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சூரியகாந்திக்கு மாறும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,04:25 IST

தேனி : போடி பகுதி விவசாயிகள் கரும்பு சாகுபடியை கை விட்டு சூரியகாந்திக்கு மாறி வருகின்றனர். கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் வருமானம் எடுக்க 12 மாதம் காத்திருக்க வேண்டும். தவிர சர்க்கரை ஆலையில் கரும்பு போட்ட விவசாயிகளுக்கு உடனடியாக பணம் கிடைப்பதில்லை. பணம் கிடைக்க மேலும் மூன்று மாதம் தாமதம் ஆகிறது. இதனால் விவசாயிகள் குறுகிய கால பயிர்களுக்கு மாறி வருகின்றனர். மக்காச்சோளம், சூரியகாந்தி போன்ற ரகங்களை சாகுபடி செய்து வருகின்றனர். போடி, காமராஜபுரம், மீனாட்சிபுரம், பத்திரகாளிபுரம் உட்பட பல பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் அதனை மாற்றி விட்டு, குறுகிய கால சாகுபடி பயிறுக்கு மாறி உள்ளனர்.

**மண் பரிசோதனை ஆய்வு முடிவுக்கு ஏற்ப உரத்தை பயன்படுத்த அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,03:45 IST

திருநெல்வேலி : மண் பரிசோதனை ஆய்வு முடிவுக்கு ஏற்ப ரசாயன மற்றும் இயற்கை உரங்களை இடுவதுடன், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி திருந்திய நெல்சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இது குறித்து அவர் அறிக்கையில் கூறியிருப்பதாவது;நெல்லை மாவட்டம், அம்பை, கடையம், சேரன்மகாதேவி, முக்கூடல், பாளை., மானூர், தென்காசி மற்றும் செங்கோட்டை வட்டாரங்களில் விவசாயிகள் கார் பருவ நெல் சாகுபடி செய்து வருகின்றனர். மாவட்டத்திற்கு கார் சாகுபடி பருவம் முடிய யூரியா 24 ஆயிரத்து 500 மெட்ரிக் டன்னும், டிஏபி., 7ஆயிரத்து 200 மெ.டன்னும், பொட்டாஷ் 10 ஆயிரம் மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 11 ஆயிரத்து 20 மெ.டன்னும் தேவை என அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.இதுவரை யூரியா 9 ஆயிரத்து 600 மெ.டன்னும், டிஏபி., ஆயிரத்து 936 மெ.டன்னும், பொட்டாஷ் 2ஆயிரத்து

107 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 5ஆயிரத்து 592 மெ.டன்னும் சம்பந்தப்பட்ட உர நிறுவனங்கள் சப்ளை செய்துள்ளன. இதில் பொட்டாஷ், டிஏபி., உரங்கள் சப்ளை குறைவாக உள்ளது.எனவே விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்து, மண் பரிசோதனை ஆய்வு முடிவுகளுக்கு ஏற்ப பயிருக்கு பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளின் படி தழை, மணி, சாம்பல் சத்து கொண்ட உரங்களை தனித்தனி உரங்களாக வாங்கி பயிருக்கு இடலாம். மேலும் பயிர்களுக்கான பொதுவான உர பரிந்துரையில் உரங்களை இடுவதை தவிர்த்து, நிலத்தின் தன்மைக்கு ஏற்ப அதிக அளவில் இயற்கை உரங்களான மண்புழு உரம், ஊட்டமேற்றிய தொழு உரம், நன்கு மக்கியபண்ணை கழிவுகள், பசுந்தாள்உரம் போன்றவற்றை பயன்படுத்தினால் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.
திருந்திய நெல் சாகுபடியின் போது நீரை சிக்கனமாக பயன்படுத்தினால் தண்ணீரில் உரம் வீணாவது தவிர்க்கப்படும். மேலும் இலை வண்ண அட்டையை பயன்படுத்திதேவைக்கு ஏற்ப ரசாயன உரங்களை மேலுரமாக இடுவதால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. இதனால் ரசாயன உரத்திற்காக தேவையின்றி பணம் செலவு செய்வது தவிர்க்கப்படுகிறது.எனவே விவசாயிகள் மண் பரிசோதனை முடிவுகள் அடிப்படையில் ரசாயன உரங்களை இடுவதோடு, அதிகளவில் இயற்கை உரங்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.இத்தகவலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் அறிக்கையில் கூறியுள்ளார்.

**நெல் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 08,2011,03:45 IST

ஆழ்வார்குறிச்சி : நெல் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்த கடையம் வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.கடந்த ஆண்டு கார்பருவத்தில் நெல் குருத்துப்பூச்சியினால் பெருத்த சேதம் ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டது. தற்போது கார் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. நெல் குருத்துப்பூச்சியை பூச்சி மருந்துகள் தெளித்து முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொண்டால் குருத்துப்பூச்சியை ஒழிக்க முடியும்.நெல் நடவு செய்தவுடன் ஒரு ஏக்கரில் 5 எண்ணம் நெல் குருத்துப்பூச்சிக்கான இனக்கவர்ச்சி பொறிகளை வைக்க வேண்டும். இப்பொறியிலுள்ள பெண் அந்துப்பூச்சியின் வாசனைக்கு ஆண் அந்துப்பூச்சிகள் கவர்ந்திழுக்கப்பட்டு அழிக்கப்படும். இதனால் குருத்துப்பூச்சியின் இனப்பெருக்கம் முற்றிலும் தடைபட்டு குருத்துப்பூச்சி தாக்குதலை தவிர்க்கலாம்.மேலும் விபரங்களுக்கு கடையம் வட்டார வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுக வேண்டுமென கடையம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.

**சுகுணா பவுல்ட்ரி பார்ம் புதிய கால்நடை தீவனம், உயிரி உரம் அறிமுகம்**

ஆகஸ்ட் 08,2011,00:03




உடுமலை: சுகுணா கறிக்கோழி நிறுவனம், புதிய கால்நடை தீவனம் மற்றும் உயிரி உரத்தை, கோவை கொடீசியாவில் நடந்த, விவசாய கண்காட்சியில் அறிமுகப்படுத்தியது.

கோவையில், தலைமை அலுவலகத்தை கொண்டு செயல்பட்டு வரும், சுகுணா பவுல்ட்ரி நிறுவனம், இந்தியாவின், 11 மாநிலங்களில் செயல்பாடுகளை கொண்டுள்ளன.

ஆண்டுக்கு, 4,000 கோடி ரூபாய் விற்றுமுதல் ஈட்டி வரும் இந்நிறுவனம், பிராய்லர், லேயர் பார்மிங், குஞ்சு பொரிப்பகம், தீவன ஆலைகள், பிராசசிங் ஆலைகள், தடுப்பு மருந்து மற்றும் ஏற்றுமதி என கோழிப்பண்ணை தொழிலின் அனைத்து பிரிவுகளிலும் முழுமையான செயல்பாடுகளை கொண்டுள்ளது.

சவுதிஅரேபியா, குவைத், ஐக்கிய அரபு எமிரேட், ஓமன், பஹ்ரைன், ஆப்கானிஸ்தான், கத்தார் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வரும் இந்நிறுவனம், உள்நாட்டில் சிக்கன் விற்பனைக்காக நவீன சில்லரை விற்பனை நிலையங்களை சங்கிலித் தொடராக கொண்டுள்ளது.ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் நிபுணத்துவம் கொண்டுள்ள இந்நிறுவனம், தற்போது புதிய கால்நடை தீவனத்தையும், விவசாய பயிர்களுக்கான உயிரி உரத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய சுகுணாஸ் கேட்டில் பீட், புரோட்டீன், கார்போஹைட்ரேட்ஸ், கொழுப்பு, வைட்டமின்கள் மற்றும் மினரல்கள் ஆகியவை தேவையான அளவு, கலந்து தயாரிக்கப்பட்டுள்ளதால், பால் உற்பத்தி பல மடங்கு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.கால்நடைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் பால் உற்பத்தியை அதிகரிக்க, தேவையான முதல் தரமான புண்ணாக்கு, பருப்பு வகைகள், மினரல்கள் மற்றும் வைட்டமின்கள், புதிய தீவனத்தில் இருப்பதால், பால் உற்பத்தி திறன் மற்றும் பால் சுரக்கும் காலத்தை விரிவுபடுத்த உதவுகிறது. மேலும், பாலில் உள்ள கொழுப்பு, எஸ்என்எப்., ஆகியவையும் அதிகரிக்கிறது.புதிய உயிரி உரம்: வேளாண்துறை சம்பந்தப்பட்ட, மூன்றாண்டு கால ஆராய்ச்சிக்கு பிறகு, சுகுணா நிறுவனம் சக்தி வாய்ந்த உயிரி உரத்தை தயாரித்துள்ளது. இந்த உரம், பயிர்கள் ஆரோக்கியமாக வளரவும், பூச்சிகள் இல்லாத

சூழ்நிலையை ஏற்படுத்தவும் உதவுகிறது. சுகுணாஸ் உயிரி உரம் (பயோ மேன்யூர்) மண் வளத்தை அதிகரிக்கவும், மண்ணின் நீர் உறிஞ்சும் திறனை மேம்படுத்தி மகசூல் அதிகரிக்கவும் உதவுகிறது. இந்த உரத்தை அனைத்து வகையான பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். ஒரு கிலோ, 5 கிலோ மற்றும் 50 கிலோ என மூன்று விதமான பேக்குகளில் இந்த உரம் கிடைக்கிறது.

இந்த இரண்டு புதிய தயாரிப்புகளையும், கோவை கொடீசியாவில் நடந்த விவசாய கண்காட்சியில், சுகுணா பவுல்ட்ரி நிறுவனம் அறிமுகப்படுத்தியது.

**சணல் பொருள் தயாரிப்பு குறித்து சுய உதவிக்குழு பெண்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2011,01:43 IST

கடலூர் : சுய உதவிக் குழு பெண்களுக்கு சணல் பொருள் தயாரிப்பது குறித்த சிறப்பு பயிற்சி முகாம் கடலூரில் நடந்தது.தேசிய சணல் வாரியம், கோவை ஜோதி கன்னிகா யுனிவர்சல் சர்வீஸ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம் இணைந்து சணல் பொருள் தயாரிப்பது குறித்த சிறப்பு பயிற்சி முகாம் கடலூர் டவுன்ஹாலில் நடந்தது.
சணல் சேவை மைய செயலர் பொன்னரசு வரவேற்றார்.திட்ட அலுவலர் ராமசாமி பயிற்சியின் நோக்கம் குறித்து விளக்கினார். கலெக்டர் அமுதவல்லி முகாமை துவக்கி வைத்து பேசியதாவது:சுற்றுச் சூழலை பாதுகாத்திட பாலிதின் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அதற்கு மாற்றாக சணல் பொருட்களை பயன்படுத்தலாம். சணல் முற்றிலுமாக மக்கக் கூடியது. இதனால் சணல் பயன்பாட்டை ஊக்குவிக்க அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.அதனையொட்டி சணலை கொண்டு பை, வீட்டு உபயோக அலங்காரப் பொருட்கள் தயாரிக்க சுய உதவிக்குழு பெண்களுக்கு இந்த சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.ஒருநாள் பயிற்சியில் பங்கேற்றுள்ள பெண்களில் 30 பேரை தேர்வு செய்து 21 நாள் அடிப்படை பயிற்சி, 14 நாள் உயர்நிலைப் பயிற்சி, 7 நாள் வடிவமைப்பு பயிற்சி இறுதியாக செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட உள்ளது.இந்த பயிற்சியை பயன்படுத்திக் கொண்டு பெண்கள், சணல் பொருட்களை தயாரித்து தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்வதோடு, சமுதாயத்தின் சுற்றுச் சூழலை பாதுகாக்க முன் வர வேண்டும்.இவ்வாறு கலெக்டர் அமுதவல்லி பேசினார்.விழாவில், நபார்டு உதவி பொது மேலாளர் ராஜகோபாலன், முன்னோடி வங்கி கிருஷ்ணன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மகாலிங்கம், மகளிர் திட்ட அலுவலர் வெங்கடாசலம் உள்ளிட்டோர் பேசினர். சிவக்குமார் நன்றி கூறினார்.அதனைத் தொடர்ந்து சுய உதவிக் குழு பெண்களுக்கு சிறப்பு பயிற்சி நடைபெற்றது.

**நெற்பயிர் விளைச்சல் போட்டி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2011,02:55 IST

மதுரை:மதுரை மேற்கு வட்டார விவசாயிகளுக்கு திருந்திய நெற் சாகுபடி திட்டத்தின் கீழ் நெல் பயிர் விளைச்சல் போட்டிநடந்தது. வேளாண் இணை இயக்குனர்சங்கரலிங்கம் தலைமை வகித்தார். துணை இயக்குனர் சம்பத்குமார் முன்னிலை வகித்தார். போட்டியை உதவி இயக்குனர் வடிவேல்
குமார் நடத்தினார். இதில் சமயநல்லூர் விவசாயி முருகேசபாண்டியன் இரண்டாம்பரிசு பெற்றார். அவருக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசு மற்றும் சான்றிதழை கலெக்டர் சகாயம் வழங்கினார்.

**காய்கறி சாகுபடி விழிப்புணர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2011,02:54 IST

மதுரை:சேடப்பட்டி அருகே சென்னம்பட்டியில் காய்கறி விதைப்பு பணி துவக்கி வைக்கப்பட்டது.தோட்டக்கலைத் துறை சார்பில் நடந்த இந்நிகழ்ச்சியில், வீட்டுத் தோட்டம் அமைப்பது, காய்கறி சாகுபடியில் அதிக மகசூல், மா, நெல்லி, வாழை, திசுவாழை, மல்லிகை, மிள காய், மண்புழு உரம் போன்றவை குறித்து விளக்கப்பட்டது. விவசாயிகளின் வீடுகளில் பண்ணை மகளிர்குழுவினரால் பயிர்க்குழிதோண்டப்பட்டு, பாகல், புடலை, வெண்டை, சுரை போன்ற காய்கறி விதைகள் விதைக்கப்பட்டன.ஊராட்சி தலைவர் பாண்டி முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் முத்தம்மாள் துவக்கி வைத்தார். தோட்டக்கலைஅலுவலர் மு.பாண்டி விளக்கி பேசினார்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை விண்ணப்பம் 10ம் தேதி முதல் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 07,2011,01:22 IST

திருநெல்வேலி : சேரன்மகாதேவி வட்டாரத்தில் விவசாயிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்படுவதற்கான இலவச விண்ணப்பம் வரும் 10ம் தேதி முதல் வழங்கப்படுகிறது.இதுகுறித்து சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ் அறிக்கையில் கூறியிருப்பதாவது:தமிழக அரசின் உத்தரவுப்படி விவசாயிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. இதன்படி விவசாயிகளின் அடிப்படை விபரங்கள் தேவைப்படுவதால் தங்களை பற்றிய முழு விபரங்களை பதிவு செய்து அடையாள அட்டையை

பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விண்ணப்ப படிவங்கள் தங்கள் பகுதியில் உள்ள பஞ்.,அலுவலகங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் அருகில் உள்ள சேரன்மகாதேவி, வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் வரும் 10ம் தேதி முதல் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இவ்விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு அத்துடன் தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 1, நிலத்திற்கான தீர்வை ரசீது நகல் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை நகலையும் இணைத்து அருகில் உள்ள சேரன்மகாதேவி, வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் வரும் 31ம் தேதிக்குள் ஒப்படைக்க வேண்டும்.இவ்வாறு ஜெயசெல்வின் இன்பராஜ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை பரிசோதனை செய்வது அவசியம் மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் பேச்சு



முகாமில் ஒரு கால்நடைக்கு தடுப்பூசி போடப்பட்ட போது எடுத்த படம்.

*ஊட்டி, ஆக.8–*

*விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் கால்நடை களை முறையாக பரா மரிப்பதோடு, அரசு*

நடத் தும் முகாம்களில் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொள்ள வேண் டும் என்று மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக் குனர் தீபக் ஸ்ரீவஸ்தவா கூறினார்.
முகாம்
மத்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை ஆகியவை இணைந்து இடுஹட்டி கிராமத்தில் கால்நடை மேம் பாட்டிற்கான மருத்துவ முகாமை நடத்தின.
இந்த முகாமை மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் தீபக் ஸ்ரீவஸ்தவா தொடங்கி வைத்து பேசியதாவது:– கிராம பொருளாதாரத்தில் கால் நடைகள் முக்கிய பங்கு வகிக்கிறது, கால்நடைகளை முறையாக பாராமரித்து வர வேண்டும்.
ஐந்தாண்டு திட்டம்
பயனாளிகள் தங்கள் கால்நடைகளை முறையாக பரிசோதனை செய்வதோடு மட்டுமல்லாமல், இது போன்று நடத்தப்படும் முகாம்களில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.
12–ம் ஐந்தாண்டு திட்டத் தின் கீழ் அரசு கால் நடை பராமரிப்பு துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தை பொருத்த வரையில் இந்த துறை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.
இவ்வாறு அவர் பேசினார்.
கோமாரி நோய் தடுப்பூசி
நிகழ்ச்சியில் திட்ட முதன்மை ஆய்வாளர் தரம்வீர்சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த முகாமில் 100 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். மொத்தம் 81 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, சினை ஆய்வு, குடற்புழு நீக்கம் போன்ற சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டது. மேலும் பலவீனமான மற்றும் அதிக பால் தரக்கூடிய பசுக்களுக்கு தாது உப்புகள் அடங்கிய கலவையும் அளிக்கப்பட்டன.
முன்னதாக வேளாண் விரிவாக்க முதுநிலை விஞ்ஞானி சுந்தரம்மாள் அனை வரையும் வரவேற்று பேசி னார். முடிவில் இடுஹட்டி நீர்பிடிப்பு பகுதி குழு தலைவர் ராஜ்மல்லன் நன்றி கூறினார்.

## டீசல் விலை அதிகரிப்பு, கூலி உயர்வு காரணமாக விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், பூச்சி கொல்லி மருந்துகள் வழங்க கோரிக்கை

கொலக்கம்பை, ஆக.8–
டீசல் விலை அதி கரிப்பு மற்றும் கூலி உயர்வு காரணமாக விவ சாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்க வேண் டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.
மலை காய்கறிகள்
கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங் களான தூதூர்மட்டம், டெரா மியா, கெரடாலீஸ், சட்டன், கேத்தி பாலாடா, கொல்லி மலை, அதிகரட்டி, தேவர் சோலை உள்ளிட்ட பகுதி களில் உள்ள பெரும்பாலா னோர் மலை தோட்ட காய்கறி களை பயிரிட்டு வருகின்ற னர்.

நீலகிரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் காய்கறி களை விவசாயிகள் மேட்டுப் பாளையம், ஊட்டி போன்ற பகுதிகளில் உள்ள மொத்த காய்கறி மண்டிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.இங்கு விற்பனை செய்யப்படும் காய்கறிகளே கர்நாடகா, கேரளா மற்றும் தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

டீசல் விலை உயர்வு

இந்த நிலையில் தற்போது நாளுக்கு நாள் பெட்ரோல், டீசலின் விலை உயர்வால் லாரியின் வாடகைகளும், விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்ச மோட்டாருக்கு தேவையான டீசலும் கூடுத லாக செலவாகி வருகிறது. தற்போது விவசாய நிலங்களில் பணி புரிய ஆட்கள் பற்றா குறையாக உள்ளது. இதனால் அவர்களின் கூலியும் அதிகரித்து உள்ளது.

மேலும் அரசின் மூலம் கிடைக்க பெறும் விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் விலை உயர் வாலும் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வரு கின்றனர். மேலும் தற்போது இப்பகுதியில் நிலவும் தட்ப வெப்ப நிலையான பகல் வேளையில் சூறாவளி காற்றுடன் மழை பெய்து வருவதாலும் விவசாய பயிர்களின் மகசூல் ஆண்டுக்கு ஆண்டு வெகுவாக குறைந்தே வருகிறது.

மானியம்

இதனால் இதனை நம்பி உள்ள பெரும்பாலான விவசாயிகள் பெரும் பொருளாதார சிக்கலில் சிக்கி தவித்து வருகின்றனர். எனவே அரசு விவசாயத்தை ஊக்குவிக் கும் வகையில் விவசாயி களுக்கு விதை மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை மானியத்துடன் வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

விவசாய நலன்களுக்காக வங்கிகள் மூலம் கடன் பெறவும் உத்தரவிட வேண்டும் என விவசாயிகள் தமிழக அரசுக்கும், மாவட்ட நிர் வாகத்திற்கும் கொலக்கம்வை பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,850–2,950

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 3,900–3950

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,850–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,625–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 2,013–00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சிவிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரி உள்பட) 10,500–00
டின் (15 கிலோ) 1,750–00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,200.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 555–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஆக.5–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வாமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(30கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஆக.5–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. வி.797 22எம்.எம் | ரூ. | 6,186 |
| 2. ஜெயதார் (கர்நாடகா) | ரூ. | 7,030 |
| 3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 9,510 |
| 4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 8,577 |
| 5. சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 9,842 |
| 6. எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 10,123 |
| 7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 15,185 |

## கோவை உழவர் சந்தை

கோவை,ஆக.5–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 28–00 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–16 |
| வெண்டைக்காய் | ரூ. | 18–20 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5–6 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6.00 |
| புடலை | ரூ. | 14–18 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12–14 |
| சுரைக்காய் | ரூ. | 14–12 |
| பாகற்காய் | ரூ. | 12–14 |
| கொத்தவரை | ரூ. | 14–16 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 |
| அரசாணிக்காய் | ரூ. | 6–7 |
| பேரக்காய் | ரூ. | 18–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 24–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 34–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16–17 |
| பெரியவெங்காயம் | ரூ. | 16–00 |
| இஞ்சி | ரூ. | 34–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 18–20 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16–20 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 30–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–15 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–22 |
| முள்ளங்கி | ரூ. | 16–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 28–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 14–16 |
| நூல்கோல் | ரூ. | 20–24 |
| கொத்தமல்லி | ரூ. | 24–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20–24 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 |
| கலர்கோஸ் | ரூ. | 15–00 |
| புதினா | ரூ. | 16–00 |

| | | |
|---|---|---|
| காலிப்பிளவர் | ரூ. | 20–24 |
| பொறியல் தட்டை | ரூ. | 14–20 |
| தேங்காய் | ரூ. | 7–12 |
| பட்டாணி | ரூ. | 50–60 |
| பூண்டு | ரூ. | 96–00 |
| கறிவேப்பிலை | ரூ. | 10–12 |
| அகத்தி | ரூ. | 16–00 |
| வாழைக்காய் | ரூ. | 16–20 |
| குடைமிளகாய் | ரூ. | 36–00 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 22–20 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 38–00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 20–22 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 24–00 |
| காளான் | ரூ. | 80–150 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 11–00 |
| மாங்காய் | ரூ. | 14–16 |
| திராட்சை | ரூ. | 65–00 |
| சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–18 |
| கொய்யா1கிலோ | ரூ. | 28–32 |
| மாதுளை1கிலோ | ரூ. | 80–00 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–15 |
| வரமிளகாய் | ரூ. | 90–00 |
| மாம்பழம் | ரூ. | 50–00 |
| ஆப்பிள் | ரூ. | 115–80 |
| சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| நெல்லிக்காய் | ரூ. | 32–00 |
| ஆரஞ்சு | ரூ. | 65–00 |
| வெள்ளரி | ரூ. | 12–26 |
| புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–32 |
| அவரை | ரூ. | 20–24 |
| நிலக்கடலை | ரூ. | 35–00 |
| மக்காச்சோளம் | ரூ. | 18–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 27000 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 27,500 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 28,500 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11,100 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,500 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 10500 |
| கொப்பரை நாடன் | ரூ. 6875 |
| கொப்பரை ராசு | ரூ. 6475 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6750 |
| கொப்பரை ராஜீப்பு | ரூ. 8000 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7300 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 19750 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20850 |
| ரப்பர் பால் | ரூ. 16250 |
| காப்பி | ரூ. 10800 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6000 |
| நேந்திரகாய் | ரூ. 2700 |
| இஞ்சி | ரூ. 1100 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஆக.5–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,710 | 110.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1240 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1190 | 75.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1020 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.190.00 | அதிகபட்சவிலை | ரூ.251.00 |
| சராசரி விலை | ரூ.169.58 | சராசரி விலை | ரூ.231.10 |
| குறைந்தபட்சவிலை | ரூ.152.00 | குறைந்தபட்சவிலை | ரூ.160.00 |

**பட்டு நூல் ரூ.1,644**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 18,296.00 | 18208.00 | 18,320.00 |
| ஒரு கிராம் | 2,287.00 | 2,276.00 | 2,290.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 59,415.00 | 63,000.00 | 63,500.00 |
| ஒரு கிராம் | 63.55 | 63.00 | 63.50 |

தினகரன்

# ரூ.4,450 கோடி மதிப்பில் செயில் கூட்டு உரஆலை

பதிவு செய்த நாள் : 8/8/2011 0:45:26




புதுடெல்லி: அரசு நிறுவனமான செயில், நேஷனல் பெர்டிலைசர்ஸ் (என்எப்எல்) நிறுவனத்துடன் இணைந்து ரூ.4,450 கோடி மதிப்பில் ஜார்கண்ட் மாநிலத்தில் யூரியா உற்பத்தி தொழிற்சாலையை அமைக்கிறது. செயில் நிறுவனத்துடன் இணைந்து என்எப்எல் ஜார்கண்ட் சிந்திரி நகரில் புதிய யூரியா உரத் தொழிற்சாலையை அமைக்க வாய்ப்புள்ளது. ஆனால், அதுபற்றி இன்னும் இறுதி செய்யப்படவில்லை. மேலும் உறுதியான முடிவு எடுத்தபின் விரைவில் தொழிற்சாலை திட்டத்துக்கான முழு விவரம் வெளியாகும் என்று உரத் துறை அமைச்சக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த வாரம் கூடிய அமைச்சரவை குழு உருக்கு, உரம் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க செயில் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியது.